# கள்ளக்குறிச்சி நகராட்சி

## 2021–ம் ஆண்டு நவம்பர் மாதம் 17 –ம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலத்தில் அவசரகூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை: திரு.என். குமரன்.பி.எஸ்.சி,
தனிஅலுவலர்/ஆணையாளர்,

**பொருள்; 01**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவார்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 26850/2021/E2, நாள். 12.11.2021ல், வடகிழக்கு பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவும், மழையினால் ஏற்படும் சேதங்களை தற்காலிகமாகவும், உடனடியாகவும் மேற்கொண்டு பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்களை தவிர்த்திடும் விதமாக பணிகளை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகளில் ஏற்படும் பள்ளங்களை Wet Mix Macadam (WMM) மற்றும் PCC 1:2:4 கான்கிரீட் கலவைகள் கொண்டு தற்காலிகமாக ஒட்டுப் பணிகள் (Patch Work) மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே, இதன் முதற்கட்ட நடவடிக்கையாக Wet Mix Macadam (WMM) மற்றும் PCC 1:2:4 கான்கிரீட் கலவைகள் கொண்டு ஒட்டுப் பணிகள் (Patch Work) மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 4,35,000/– (ரூபாய் நான்கு இலட்சத்து முப்பத்தி ஐந்தாயிரம் மட்டும்)–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத்தை தற்போது நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பேரிடர் மேலாண்மை திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2730 / 2021 / இ1)

**பொருள்;02**

கள்ளக்குறிச்சி நகராட்சியில், குடிநீர் நிதி 2021–2022ன் கீழ், கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 10.11.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு தேவையான திரவ குளோரின் விநியோகம் செய்யும் பணி. | ரூ. 4,90,000/– | M/s. சர்வம் கெமிக்கல்ஸ், நாகப்பட்டினம் | 0.47% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. குளோபல் என்விரன்மென்ட் கோயம்புத்தூர் | 2.33% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| | | | M/s.The Clone தாராபுரம். | 3.13% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் விலைப்புள்ளிகளில் 0.47% மதிப்பீட்டைவிட குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள **M/s. சர்வம் கெமிக்கல்ஸ், நாகப்பட்டினம்,** என்பவரின் விலைப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2944 / 2021 / இ1)**

**பொருள்;03**

அரசாணை (நிலை) எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (NS) துறை நாள். 30.10.2021 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 20543/2021/P2, நாள். 16.11.2021ல், கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2021-2022ன் கீழ், கள்ளக்குறிச்சி நகராட்சியில் சாலைகள் அமைக்கும் பணிகள் ரூ. 254.27 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கள்ளக்குறிச்சி நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு, ரூ. 254.27 இலட்சத்திற்கு கீழ்காணும் விவரப்படி உள்ள சாலைப்பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | நீளம் (கி.மீ.) | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| | **தார்சாலைகள்** | | |
| 1. | கோட்டைமேடு, ராஜாராம் நகர், சரஸ்வதி தெரு, ஈ.பி. காலனி ராமச்சந்திரா நகர் 1-வது தெரு, ஜீவமணி ஹைடெக் சிட்டி, முல்லை நகர்-A, முல்லை நகர்-B தார்சாலைகள் மற்றும் ராஜாராம் நகரில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் (வார்டு எண். 08, 10, 12, 14) | 1.014 | 90.60 |
| 2. | மோரைப்பாதை, திரு.வி.க. நகரில் மழைநீர் வடிகால், சிறுபாலத்துடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைத்தல் (வார்டு எண். 01) | 0.153 | 15.65 |
| 3. | 7-வது பிரதான தெரு, வ.உ.சி. நகர் 7-வது பிரதான தெரு, வ.உ.சி. நகர் எம்.ஜி.ஆர். நகர் குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால், சிறுபாலத்துடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைத்தல் (வார்டு எண். 02) | 0.267 | 30.98 |
| 4. | மாசிலாமணி தெருவில் மழைநீர் வடிகால், சிறுபாலத்துடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைத்தல் (வார்டு எண். 05) | 0.062 | 7.65 |
| 5. | ராஜகணபதி நகரில் மழைநீர் வடிகால், சிறுபாலத்துடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைத்தல் (வார்டு எண். 07) | 0.071 | 8.46 |
| 6. | எம்.ஆர்.என். நகர்-A. எம்.ஆர்.என். நகர்-Bல் மழைநீர் வடிகால், சிறுபாலத்துடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைத்தல் (வார்டு | 0.077 | 8.95 |

| | | | |
|---|---|---|---|
| | எண். 10) | | |
| 7. | ரமணர் தெருவில் மழைநீர் வடிகால், சிறுபாலத்துடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைத்தல் (வார்டு எண். 12) | 0.137 | 12.25 |
| 8. | தெற்கு தெருவில் மழைநீர் வடிகால், சிறுபாலத்துடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைத்தல் (வார்டு எண். 13) | 0.221 | 13.40 |
| 9. | சப்தகிரி நகர்–A, சப்தகிரி நகர்–B, ராமச்சந்திரா நகர்–A, ராமச்சந்திரா நகர்–Bல் மழைநீர் வடிகால், சிறுபாலத்துடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைத்தல் (வார்டு எண். 14) | 0.221 | 20.30 |
| 10 | கரியப்பாநகர் சாலை–A, கரியப்பாநகர் சாலை–Bல் மழைநீர் வடிகால், சிறுபாலத்துடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைத்தல் (வார்டு எண். 15) | 0.152 | 17.23 |
| 11. | விளாந்தாங்கல் சாலை–A, வைஷ்ணவி நகர், விளாந்தாங்கல் சாலை–B, விளாந்தாங்கல் சாலை–C, சக்தி நகரில் மழைநீர் வடிகால், சிறுபாலத்துடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைத்தல் (வார்டு எண். 21) | 0.240 | 28.80 |
| **மொத்தம்** | | **2.615** | **254.27** |

மேற்காணும் விவரப்படி உள்ள சாலைப்பணிகளை மேற்கொள்ள உரிய தொழில்நுட்ப அனுமதி பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2762 / 2021 / இ1)**

**பொருள்;04**

அரசாணை (நிலை) எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (NS) துறை நாள். 30.10.2021 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 20543/ 2021 /P2, நாள். 16.11.2021ல், கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2021–2022ன் கீழ், கள்ளக்குறிச்சி நகராட்சியில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணியினை ரூ.148.58 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில். கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு ரூ.148.58 இலட்சத்தில் கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 15–ல் உள்ள ஏமப்பேர் பகுதியில் T.S. No. 151/2 இல் நவீன எரிவாயு தகனமேடை (LPG) அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் பணி மேற்கொள்ள உரிய தொழில் நுட்ப அனுமதி பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.ள

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2190 / 2021 / இ1)**

**பொருள்;05**

அரசாணை (நிலை) எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (NS) துறை நாள். 30.10.2021 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 20543/2021/P2, நாள். 16.11.2021ல், கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2021–2022ன் கீழ், கள்ளக்குறிச்சி நகராட்சியில் நூலகத்துடன் கூடிய அறிவுசார் மையம் அமைக்கும் பணிக்கு ரூ.115.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்க்கொள்ள நிர்வாக அனமதி அளிக்கப்பட்டுள்ளது. கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்ட வழிகாட்டு நெறிமுறைகளுட்பட்டு. ரூ.115.00 இலட்சத்தில் கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.–ல் உள்ள சீத்தாராம் பகுதி பூங்கா பகுதியில் T.S.No.273/2 ல் நூலகத்துடன் கூடிய அறிவுசார் மையம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் பணி மேற்கொள்ள உரிய தொழில் நுட்ப அனுமதி பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2762 / 2021 / இ1)**

**பொருள்;06**

கள்ளக்குறிச்சி நகராட்சி 21 வார்டுகளை உள்ளடக்கி, 15.87 ச.கி.மீ. பரப்பளவில் முதல் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 52507 ஆகும்.

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2362 தெருமின் விளக்குகள் உள்ளன. மேற்கண்ட தெருமின் விளக்குகள் பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணிகளை மேற்கொள்ள போதுமான பணியாளர்கள் இல்லாததால், இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள சிரமமாக உள்ளது.

தற்போது, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 21787/2021/EA2, நாள். 02.10.2021 மற்றும் 16.11.2021 நாட்களில் அடிப்படை வசதி பணிகளான குடிநீர், தெருமின் விளக்கு மற்றும் இதர பணிகளை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்ததாரர்கள் வழியாக இயக்குதல், பராமரித்தல் பணிகளை மேற்கொள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி கருத்துரு சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில், இந்நகராட்சிக்கு தெருமின் விளக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்ததாரர்கள் வழியாக மேற்கொள்ள, விரிவான திட்ட மதிப்பீடு ரூ.21.57 இலட்சத்திற்கு (ஆண்டு ஒன்றிற்கு) தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு உரிய நிர்வாக அனுமதி உரிய நிர்வாக அனுமதி மற்றும் முதன்மை அனுமதி பெற்றிட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தெருமின் விளக்கு பராமரிப்பு பணிகளை (இயக்குதல், பராமரித்தல்) வெளிக்கொணர்வு முகமை மூலம் தனியார் ஒப்பந்ததாரர் வழியாக மேற்கொள்ளுதல் பணிக்கு (மூன்றாண்டுகள்) தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ஆண்டு ஒன்றிற்கு ரூ.21.57 இலட்சத்தினை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2467 / 2021 / இ1)**

பொருள்;07

கள்ளக்குறிச்சி நகராட்சி 21 வார்டுகளை உள்ளடக்கி, 15.87 ச.கி.மீ. பரப்பளவில் முதல் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 52507 ஆகும்.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 21787/2021/EA2, நாள். 02.10.2021 மற்றும் 16.11.2021 நாட்களில் அடிப்படை வசதி பணிகளான குடிநீர், தெருமின் விளக்கு மற்றும் இதர பணிகளை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்ததாரர்கள் வழியாக இயக்குதல், பராமரித்தல் பணிகளை மேற்கொள்ள பொது வழிமுறைகள் தெரிவித்து அதற்கிணங்க கருத்துரு சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 74.380 கி.மீ. நீளத்திற்கு குடிநீர் விநியோக குழாய்கள், 155 திருகுகள் உள்ளன. மேற்கண்ட குடிநீர் விநியோக பணிகளை மேற்கொள்ள போதுமான பணியாளர்கள் இல்லாததால் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி, விரிவான திட்ட மதிப்பீடு ரூ. 86.78 இலட்சத்திற்கு (ஆண்டு ஒன்றிற்கு) தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு உரிய நிர்வாக அனுமதி மற்றும் முதன்மை அனுமதி பெற்றிட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் விநியோக பணிகளை (இயக்குதல் மற்றும் பராமரித்தல் – மூன்று ஆண்டுகள்) வெளிக்கொணர்வு முகமை மூலம் தனியார் ஒப்பந்ததாரர் வழியாக மேற்கொள்வற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.86.78 இலட்சத்தினை (ஆண்டு ஒன்றிற்கு) நகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2381 / 2021 / இ1)

பொருள்;08

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 21191/2021/IHSDP–2, நாள். 07.10.2021 மற்றும் ந.க.எண். 21191/2021/AMRUT–2, நாள். 13.11.2021ல் **15–வது மத்திய நிதிக்குழு மான்ய நிதி 2021–2022ன் கீழ்**, கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு **ரூ. 142.00 இலட்சம்** தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைக்கான பணிகள் மேற்கொள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி Tied Grant & Un Tied Grant என இருவிதமாக செலவிடப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த இரு விதங்களில் **இனம்–Iல் (பத்து இலட்சம் மக்கட் தொகைக்கு அதிகமான நகரங்கள்), இனம்–IIல் (பத்து இலட்சம் மக்கட் தொகைக்கும் குறைவான நகரங்கள்)** என இரு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இவற்றில் இனம்–IIன் கீழ் வரும் இந்நகராட்சியில் (அ) **Tied Grantல் (ரூ. 86.00 இலட்சம்) 50% சதவிகிதம் (ரூ. 43.00 இலட்சம்)** சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்புற விவகாரங்கள் அமைச்சகத்தால் உருவாக்கப்பட்ட நட்சத்திர மதிப்பீட்டை அடைவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள **50% சதவிகிதம் (ரூ. 43.00 இலட்சம்)** குடிநீர், மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர் மறுசுழற்சி பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) **Un Tied Grantல் (ரூ. 56.00 இலட்சம்)** சம்பளம் மற்றும் பிற நிர்வாக செலவுகள் தவிர்த்து பன்னிரண்டாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பதினெட்டு

வகைகளின் கீழ் உள்ள தேவைகளுக்கு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, 15–வது மத்திய நிதிக்குழு மான்ய திட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு, ரூ. 142.00 இலட்சத்திற்கு கீழ்காணும் விவரப்படி உள்ள பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| Tied Grant – குடிநீர் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் | | |
| 1. | விளாந்தாங்கல் ஏரியிலிருந்து தீயணைப்புநிலையம் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு பிரதான குடிநீர் குழாய் அமைக்கும் பணிகள் | 13.00 |
| 2. | நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டடமைப்பு மேம்படுத்தும் பணி | 5.00 |
| 3. | விநாயகர் கிணற்றிற்கு மழைநீர் கட்டடமைப்பு வசதி ஏற்படுத்துதல் | 5.00 |
| 4. | ராஜா நகர் ஏரியின் அருகில் போர்வெல் அமைக்கும் பணி | 7.00 |
| 5. | குளோரினேஷன் செய்யும் சாதனங்களை நிறுவும் பணி | 13.00 |
| 6. | நகராட்சியின் வணிக பகுதிக்கு டுவின் பின் வாங்கும் பணி | 15.00 |
| 7. | நகராட்சி பொது கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடங்களுக்கு சானிட்டரி இன்சினேட்டர் வாங்கும் பணி | 5.15 |
| 8. | தேங்காய் மட்டைகள் மற்றும் வாழை இலை அறைக்கும் இயந்திரம் | 4.85 |
| 9. | சிறிய அளவிலான மண் அள்ளும் இயந்திரம் | 18.00 |
| | **மொத்தம்** | **86.00** |
| Un Tied Grant – சாலைப்பணிகள் | | |
| 1. | பெரிய ஏரியில் திறந்தவெளி கிணறு அமைக்கும் பணி | 40.00 |
| 2. | மோட்டார் அறை கட்டுதல் மற்றும் பம்பு கொள்முதல் செய்தல் | 16.00 |
| | **மொத்தம்** | **56.00** |

மேற்காணும் விவரப்படி உள்ள பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை 15–வது மத்திய நிதிக்குழு மான்ய நிதி திட்டம் 2021–2022ன் கீழ் செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2731 / 2021 / இ1)

பொருள்;09

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, அவர்களின் கடித எண்.25897/2021/P1 நாள்:–09.11.2021 ல் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க தூய்மை இந்தியா திட்டம் (Urban 2.0) குறித்த விவரங்கள் 6 படிவங்களில் இந்நகராட்சியின் புள்ளிவிபரங்களை உரிய

படிவத்தில் பூர்த்தி செய்து, நகர வரைப்படம், கழிவறைகள் உள்ள வரைபடம், டோப்போ வரைப்படம், முக்கிய இடங்கள் குறித்த வரைப்படம், MCC Route Map, அவ்வப்போது பொது சுகாதார பிரிவிற்கு தேவையான ஜெராக்ஸ், கலர் ஜெராக்ஸ், புக் பைண்டிங் மற்றும் இதர பணிகளுக்கு சில்லறை செலவினங்கள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.75000/– (எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதி அவ்வப்போது பெறப்படும் சில்லறை பட்டியல் தொகையை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

3.செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2627/2021/H1)

பொருள்;10

வேலையின் பெயர்:- கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 27 சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் 2 பொது கழிப்பிடங்களில் உள்ள செப்டிங்டேங்க் நிரம்பும் நிலையில் உள்ளதால் அதனை அவ்வப்போது சுத்தம் செய்யும் பணிக்கு பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளிகள் 09.11.2021 அன்று கோரப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விபரம் | திரு.சௌகர் சையத் அமீர்பாஷா, **A.A.A.பாஷா செப்டிங் டேங்க் கிளினிங், கள்ளக்குறிச்சி** | ஸ்ரீமுருகன் செப்டிங டேங்க் கிளினிங, கள்ளக்குறிச்சி | அஸ்ரப் செப்டிங டேங்க் கிளினிங, கள்ளக்குறிச்சி |
|---|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 27 சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் 2 பொது கழிப்பிடங்கள் பயன்பாட்டில் உள்ளது. தற்போது சமுதாய கழிவறைகளில் செப்டிங் டேங்க் நிரம்பும் நிலையில் உள்ளதால் அதனை அவ்வப்போது சுத்தம் செய்யும் பணிக்கு ஒரு நடைக்கு (ஆட்கள் கூலி, டீசல் செலவு உள்பட) | **1000.00** | 1100.00 | 1200.00 |

அலுவலக குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. **திரு.சௌகர் சையத் அமீர்பாஷா, A.A.A.பாஷா செப்டிங் டேங்க் கிளினிங், கள்ளக்குறிச்சி** என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணிஉத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

2.இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2506 /2021 / எச்1)

பொருள்;11

கள்ளக்குறிச்சி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தில், திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–2019ன் கீழ், துருகம் சாலையில் மக்கு உரத்திடலில் உள்ள குப்பைகளை Bio Mining முறையில் பிரித்தெடுத்தல் பணியினை, ரூ. 175.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள உரிய அனுமதி பெறப்பட்டு, அதனடிப்படையில் மேற்படி இடத்தில் இந்நகராட்சி மூலம் புதியதாக மின் மாற்றி அமைத்து அதில் 70.87 KW மின் பளு பெறப்பட்டுள்ளது. தற்போது மேற்படி இடத்தில் Bio Mining முறையில் குப்பைகளை பிரிக்கும் பணி மேற்கொள்வதற்கு இயந்திரங்கள் நிறுவும் பணி முடிவுற்ற நிலையில், சோதனை ஓட்டம் செய்வதற்கும், பணியினை தொடர்ந்து மேற்கொள்வதற்கும் தற்போதுள்ள மின் பளு (KW) போதுமானதாக இல்லாத காரணத்தினால், இயந்திரங்களை இயக்குவதற்கு கூடுதலாக 9.13 மின் பளு (KW) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திடமிருந்து பெற வேண்டியுள்ளது.

எனவே, மேற்படி பணிக்கு கூடுதலாக தேவைப்படும் மின் பளு பெறுவதற்கு ஏற்படும் தோராய செலவினம் ரூ. 25,000/– (இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்)–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு தேவைப்படும் கூடுதல் மின் பளு பெறுவதற்கான தொகையினை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் பட்டியலின் அடிப்படையில் செலுத்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவின தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2220 / 2018 / இ1)

பொருள்;12

இந்நகர்மன்ற தீர்மான எண்.207 நாள்:-31.08.2021 ல் கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு நோய் மற்றும் கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு பணிகளுக்கு, 47 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை கொண்டு சீத்தா மகளிர் மேம்பாட்டு மன்றம், கள்ளக்குறிச்சி என்ற குழுவின் மூலம் தேர்ந்தெடுத்து இந்நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் மற்றும் டெங்கு நோய் வெகுவாக பரவி வருவதால் டெங்கு நோய் தடுப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் கொசுப்புழு பணியாளர்களை பணி நீட்டிப்பு செய்து நவம்பர் 2021 வரை அனுமதி பெறப்பட்டு இந்நோய் குறித்த விழிப்புணர்வு பொது மக்களிடம் ஏற்படுத்தவும், டெங்கு மற்றும் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமல் தடுக்கும் பணியினை நவம்பர் 2021 வரை M/s.சீத்தா மகளிர் மேம்பாட்டு மன்றம் கள்ளக்குறிச்சி என்ற குழுவின் மூலமாக பணியினை செய்து வந்தார்கள். மேலும், மேற்கண்ட பணியினை தொடர்ந்து செய்ய இயலாத காரணத்தினால் பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் M/s.அன்னிபெசன்ட் மகளிர் மேம்பாட்டு மன்றம், கள்ளக்குறிச்சி என்ற குழு மேற்கண்ட பணிக்கு பணிபுரிய சம்மதம் தெரிவித்துள்ளார்கள். எனவே மேற்கண்ட M/s.அன்னிபெசன்ட் மகளிர் மேம்பாட்டு மன்றம், கள்ளக்குறிச்சி என்ற குழுவின் மூலமாகவே தொடர்ந்து 47 பணியாளர்களை டிசம்பர் 2021 முதல் மார்ச் 2022 வரை 4 மாதத்திற்கு பணியில் அமர்த்திகொள்ளவும், இவர்களுக்கு கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட தொகை நாளொன்றுக்கு ரூ.289/- வீதம் ஊதியம் வழங்கிடவும், இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.17.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. பணியின் அவசர அவசியம் கருதி M/s. அன்னிபெசன்ட் மகளிர் மேம்பாட்டு மன்றம், கள்ளக்குறிச்சி என்ற குழுவின் மூலம் டிசம்பர் 2021 மாதம் முதல் மார்ச் 2022 வரை 4 மாதத்திற்கு பணிபுரிய பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்

3. மாவட்ட ஆட்சி தலைவர் கள்ளக்குறிச்சி அவர்களால் அனுமதிக்கப்பட்ட தொகையான நாளொன்றுக்கு ரூ.289/- ஊதியமாக வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

4. பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1490 /2019/எச்1)**

**தனிஅலுவலர்**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**

# கள்ளக்குறிச்சி நகராட்சி

## 2021–ம் ஆண்டு நவம்பர் மாதம் 30 –ம் தேதி செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலத்தில் சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை: திரு.என். குமரன்.பி.எஸ்.சி,**
**தனிஅலுவலர்/ஆணையாளர்,**

**பொருள்; 01**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் காணொளி காட்சி ஆய்வு கூட்டம் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் கடித ந.க.எண்.108/2021/ஆ2, நாள்.25.11.2021ல் TUFIDCO மூலம் வட்டியில்லா கடன் திட்டத்தில் குடிநீர் குழாய் வீட்டு இணைப்புகள் (Internal Plumbing) வழங்கும் பணியினை UIDSSMT திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து நகராட்சிகளிலும் திட்டப்பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்ட இணைப்புகளில் 31.10.2021 அன்று வரை பட்டியல் தொகை வழங்கப்பட்ட இணைப்புகளை விடுத்து. மீதமுள்ள இணைப்புகள் வழங்கும் பணி 01.11.2021–ம் தேதி முதல் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி நகராட்சியில் குடிநீர் குழாய் வீட்டு இணைப்புகள் (7190 எண்கள்) வழங்கிடும் பணிக்கு TUFIDCO மூலம் UIDSSMT திட்டத்தின்கீழ் வட்டியில்லா கடன் தொகை ரூ. 245.62 இலட்சம் மற்றும் நகராட்சி பங்களிப்பு தொகை ரூ. 4.38 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 250.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ள உரிய அனுமதிகள் பெற்று, தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 7190 இணைப்புகளில், 828 குடிநீர் குழாய் வீட்டு இணைப்புகள் வழங்கியதற்கு ஒப்பந்ததாரருக்கு முதல் பட்டியல் தொகை ரூ. 30,56,289/– வழங்கப்பட்டுள்ளது. எனவே மீதமுள்ள குடிநீர் குழாய் வீட்டு இணைப்புகள் (6362 எண்கள்) வழங்கும் பணியினை அம்ரூத் 2.0 திட்டத்தில் மேற்கொள்ளவும், UIDSSMT திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணியை ஒப்படைப்பு செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 777 / 2018 / இ1)**

**பொருள்;02**

கள்ளக்குறிச்சி நகராட்சியின் அலுவலக பிரிவு, பொது சுகாதார பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் பணிபுரியும் கடைநிலை பணியாளர்களுக்கு 2021–2022 ஆம் ஆண்டிற்கு வழங்கவேண்டிய சீருடைகள், தையற்கூலி, மிதியடி மற்றும் பெருக்கும் படல்கள் வழங்க வேண்டியுள்ளால் மேற்படி செலவினங்கள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00/– (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.சீருடைகள் அனைத்தும் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
3.மிதியடி, பெருக்கும் படல்கள் ஆகியவை விலைப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.
4.செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2629 /2021/H1)**

பொருள்;03

கள்ளக்குறிச்சி நகராட்சி 2004-ம் ஆண்டு சிறப்பு நிலை பேருராட்சியிலிருந்து மூன்றாம் நிலை நகராட்சியாக உருவாக்கப்பட்டது. அரசாணை (நிலை) எண்.154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.09.08.2010-ம் ஆண்டு முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. நகராட்சி அலுவலகம் தற்போதுள்ள கட்டிடத்தில் 2011-ம் ஆண்டு முதல் செயல்பட்டுவருகிறது. அலுவலகத்தில் அனைத்து பணிகளும் UTIS முறையில் கணணியில் மேற்கொள்வதால் அனைத்து இருக்கைகளுக்கும் கணணிகள் பிரின்டர்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இந்நகராட்சி பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் பணிசெய்வதற்கு கூடுதல் அறைகளுடன் கட்டிடம் இயங்கி வருவதால் இக்கட்டிடத்தின் மின் வசதி போதிய அழுத்தம் இன்றி அடிக்கடி பழுதுகள் மற்றும் மின்கசிவு ஏற்பட்டு விளக்குகள், மின்விசிறிகள் மற்றும் கணணிகள் ஆகியவை பழுதுகள் ஏற்படுகிறது. எனவே இவ்வாறு அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதை தவிர்க்க மின் வசதியில் புதிதாக Lood Distribution செய்து அனைத்து அறைகளுக்கும், கணணிகளுக்கும் UPS Line அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு ரூ.8.50.000/-க்கு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2819 / 2021 / இ1)

பொருள்;04

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொது நிதி 2021-2022ன் கீழ், கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 18.10.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 15-ல் உள்ள சர்வே எண்.123/1-ல் உள்ள ஏமப்பேர் குளத்தை மேம்படுத்தும் பணிக்கு ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு அமைக்க திட்ட கருத்துரு பிரேரணை தயார் செய்வதற்கு தொழில் நுட்ப பணிகள் மேற்கொள்ளுதல். | மதிப்பீட்டு தொகையில் 2 % | M/s Anu GK Geospatial Survey Consultant Chennai. | 1.65% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. JPR Architects and Engineers. Chennai. | 1.75% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s.M Square. Koyembedu. Chennai. | 1.80% மதிப்பீட்டிற்கும் குறைவு |

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் விலைப்புள்ளிகளில்1.65% மதிப்பீட்டை விட குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள **M/s Anu GK Geospatial Survey Consultant Chennai.** நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2190 / 2021 / இ1)

பொருள்;05

கள்ளக்குறிச்சி நகராட்சி பொது சுகாதாரபிரிவில் தினசரி சேகரமாகும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம்பிரித்து மக்காதகுப்பைகளான மறுசுழற்சிக்கு பயன்படுத்தப்படாத பிளாஸ்டிக் கழிவுகளை சேகரம் செய்யப்பட்டு அதனை அரியலூர் சிமெண்ட் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. மேலும், அவ்வாறு சிமெண்ட் நிறுவனத்திற்கு மக்காத பிளாஸ்டிக் கழிவுகளை பண்டல் செய்து அதனை எடைபோட்டு கணக்கீடு செய்வதற்கும், அவ்வப்போது பொது சுகாதார பிரிவிற்கு தேவையான ஜெராக்ஸ், கலர் ஜெராக்ஸ், புக் பைண்டிங் மற்றும் இதர பணிகளுக்கு சில்லறை செலவினங்கள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.50000/– (ஐம்பதாயிரம் மட்டும்) மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதி அவ்வப்போது பெறப்படும் சில்லறை பட்டியல் தொகையை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

3.செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2411 /2021/H1)

பொருள்;06

அரசு முதன்மை செயலர் தமிழ்நாடு காப்பகங்கள் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி சென்னை அவர்களின் தலைமையில் மாவட்ட ஆட்சியர் கள்ளக்குறிச்சி அலுவலகத்தில் கடந்த 01.10.2021 அன்று காணொலி காட்சியின் மூலம் வடகிழக்கு பருவமழை தொடர்பாக நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் தற்போது வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ளதால் மழைநீரால் கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு, சிக்கன்குனியா மற்றும் மர்மகாய்ச்சல் ஆகிய நோய்கள் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, மேற்கண்ட நோய்கள் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் கட்டுப்படுத்த தேங்கியுள்ள மழைநீரில் கொசுப்புழு உருவாவதை தடுக்க ஏதுவாக டெமிபாஸ் மருந்தும், முதிர் கொசுக்களை அழிக்க ஏதுவாக பைரித்ரம் 2% புகைமருந்தும், மழைநீர் வடிகால்களில் உருவாகும் கொசுக்களை அழிக்க B.T.பவுடர்கள் ஆகிய கிருமிநாசினிகள் போதிய அளவில் இருப்பில் வைத்து கொண்டு போர்கால அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான கிருமிநாசினிகள் வாங்கி பயன்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார பணியின் அத்தியாவசிய கருத்தில் கொண்டு விலைப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

3.செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2413 /2021/H1)

தனிஅலுவலர்

கள்ளக்குறிச்சி நகராட்சி